செ.வெ.எண் : 974/2017 நாள் : 15.12.17

**கன்னியாகுமரி மாவட்டம்**

**ஒகி புயலினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரங்களை மேம்படுத்த வங்கிகள் வாயிலாக கடனுதவி கூடுதலாக வழங்குதல் தொடர்பான கலந்தாலோசனைக் கூட்டம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

கன்னியாகுமரி மாவட்டத்தில், ஒகி புயலினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரங்களை மேம்படுத்த வங்கிகள் வாயிலாக கடனுதவிகள் கூடுதலாக வழங்குதல் தொடர்பான கலந்தாலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று(15.12.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதுநிலை மண்டல மேலாளர் திரு.புருசோத்தமன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.விஸ்வநாதன், நபார்டு வங்கி மேலாளர் திரு.மார்டின் பிரகாசம், மாவட்ட ஆட்சியரின நேர்முக உதவியாளர்(வேளாண்மை) திரு.நிஜாமுதின் மற்றும் வங்கி மேலாளர்கள் கலந்து கொண்டனர்.

வங்கி மேலாளர்களுடனான கலந்தாலோசனைக்குப் பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலினால் விவசாயிகள், மீனவர்கள், மலைவாழ் மக்கள் உள்பட அனைத்து தரப்பினரும் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரங்களை இழந்துள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்காக, குறிப்பாக வங்கிகளில் கடன்பெற்ற விவசாயிகளின் குறுகியகால கடன்களை நீண்டகால கடன்களாக மாற்றுதல் மற்றும் குறைந்த வட்டியில் கூடுதலாக கடனுதவிகள் வழங்குதல், கூட்டு மகளிர் குழுக்களுக்கு கூடுதலாக கடனுதவிகள் வழங்குதல் தொடர்பாக மாவட்டத்திலுள்ள வங்கி மேலாளர்களுடன் கலந்தாலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலால் பாதிக்கப்பட்டு கரைதிரும்பாத மீனவர்களை கணக்கெடுக்கும் பணி வருவாய்த்துறை மற்றும் மீன்வளத்துறை அலுவலர்கள் மூலம் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. தற்போது கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி 13 வள்ளங்களில் மீன்பிடிக்க சென்ற 35 மீனவர்களும், 32 விசைப்படகுகளில் ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச்சென்ற 310 மீனவர்களும் இதுவரை கரைதிரும்பவில்லை எனவும், கடந்த மூன்று தினங்களில் மட்டும் 5 விசைப்படகுகளில் ஆழ்கடல் மீன்பிடிப்பிற்கு சென்ற 88 மீனவர்கள் கரைக்கு திரும்பி உள்ளனர். காணாமல்போன மீனவர்களை தேடும்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலால் சேதமுற்ற வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிர்கள் குறித்து கணக்கெடுக்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. இதுவரை 97.98 ஹெக்டேர் நிலப்பரப்பில் 3029 விவசாயிகளுக்கு சொந்தமான தென்னை மரங்களும், 319.81 ஹெக்டர் நிலப்பரப்பளவில் 769 விவசாயிகளுக்கான நெற்பயிர்களும் சேதமடைந்துள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. தோட்டக்கலைத்துறை பயிர்களான வாழை 1926.02 ஹெக்டர் பரப்பளவிலும், மரவள்ளி 190.885 ஹெக்டர் பரப்பளவிலும், ரப்பர் 1907.3818 ஹெக்டர் பரப்பளவிலும் இதர பயிர்கள் 198.205 என மொத்தம் 4222.4918 ஹெக்டர் பரப்பளவில் சேதமடைந்துள்ளதாக கணக்கிடப்பட்டு, இதுவரை 19,005 விவசாயிகளின் 4099.4059 ஹெக்டர் தோட்டக்கலை பயிர்கள் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் வருவாய்த்துறை அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது. என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்**